**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மை – வடகிழக்கு பருவமழை 2023 – திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பெய்த அதிகனமழை காரணமாக மிக கடுமையாக பாதிக்கப்பட்ட 11 வட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணமாக 5 கிலோ அரிசி வழங்குவதற்கு ரூ.13,57,92,338/-ஐ மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே.2**

**அரசாணை (நிலை) எண்.91**

**நாள் 08.03.2024**
**சோபகிருது வருடம், மாசி 25**
**திருவள்ளுவர் ஆண்டு 2055.**

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.579, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.12.2023.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு எண்.2585, நாள் 21.12.2023.
3. அரசாணை (நிலை) எண்.600, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 26.12.2023.
4. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அவர்களின் கடித எண். COM 11/ 020038 / 2023, நாள்: 25.12.2023 மற்றும் 12.01.2024
5. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின் கடித எண். இ.இ.1(2) / 1553 / 2023, நாள் 24.01.2024.

*****

**ஆணை:-**

மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்: –

i) திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய நாட்களில், வரலாறு காணாத அளவிற்கு அதிகனமழைப்பொழிவு ஏற்பட்டது. இந்த வரலாறு காணாத தொடர் கனமழை காரணமாக, தாமிரபரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி

ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளில், இரண்டு நாட்களுக்கு மேல் வெள்ளநீர் சூழ்ந்ததாலும், வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததாலும் பொதுமக்கள் வீடுகளிலிருந்து வெளியே வரமுடியாமல் அவர்களது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து விட்டனர். மேலும், அவர்களது வீடுகளில் இருந்த துணிமணிகள் / பாத்திரங்கள் / வீட்டு உபயோகப் பொருட்கள் இழப்பு ஏற்பட்டது.

ii) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதிகனமழையின் காரணமாக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிகக் கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில், நிவாரணமாக ரூ.6,000/-வழங்கப்படும் என்றும், இந்த மாவட்டங்களில் இதர வட்டங்களிலும் மற்றும் கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு அங்குள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.1,000/- வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளார்கள்.

iii) மேற்காணும் உத்தரவின்படி, மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வரலாறு காணாத அளவிற்கு அதி கனமழைப் பொழிவு ஏற்பட்டதால், மிகக் கடுமையாக வெள்ளம் சூழ்ந்து வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட தோராயமாக 6,63,760 குடும்பங்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக ரூ.6,000/- வழங்கப்படும் என்றும் மற்றும் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள இதர வட்டங்கள் மற்றும் கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் உள்ள அனைத்து வட்டங்களில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள ஏறத்தாழ 14,31,164 குடும்பங்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக ரூ.1,000/- வழங்கப்படும் என்றும் ஆணை வெளியிடப்பட்டது. மேலும், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட/ இரண்டு நாட்களுக்கு மேல் மழை வெள்ளம் சூழ்ந்து துணிமணிகள்/ பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் இழந்த தோராயமாக 6,63,760 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு வெள்ள நிவாரணமாக 5 கிலோ அரிசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வழங்கவும் ஆணை வெளியிடப்பட்டது.

iv) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில் உள்ள குடும்பங்களுக்கு பார்வை ஒன்றில் காணும் அரசாணையின் விதிகளுக்குட்பட்டு 5 கிலோ அரிசி வழங்கலாம் என மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அவர்கள் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார். மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக

பெறப்பட்ட அறிக்கைகளின்படி 5 கிலோ அரிசி பெற தகுதியான குடும்பங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| வ. எண் | மாவட்டம் | வட்டம் (கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்கள்) | 5 கிலோ அரிசி பெற தகுதியான குடும்பங்கள் |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | 1. திருநெல்வேலி<br>2. பாளையங்கோட்டை<br>3. சேரன்மகாதேவி<br>4. அம்பாசமுத்திரம் ஆகிய வட்டங்கள் (முழுவதும்)<br>5. இராதாபுரம் வட்டத்தில் லெவிஞ்சிபுரம், செட்டிகுளம், கூடங்குளம், விஜயாபதி மற்றும் திருவம்பலாபுரம் ஆகிய 5 வருவாய் கிராமங்கள் மற்றும்<br>6. திசையன்விளை வட்டத்தில் திசையன்விளை, அப்புவிளை, உறுமன்குளம், கரைசுத்து புதூர், கரைசுத்து உவரி மற்றும் குட்டம் ஆகிய 6 வருவாய் கிராமங்கள். | 3,40,652 |
| 2 | தூத்துக்குடி | 1. தூத்துக்குடி<br>2. திருவைகுண்டம்<br>3. திருச்செந்தூர்,<br>4. ஏரல் மற்றும்<br>5) சாத்தான்குளம் ஆகிய வட்டங்கள் முழுவதும் | 3,23,108 |
| | | **மொத்தம்** | **6,63,760** |

5 கிலோ அரிசி பெற தகுதியான 6,63,760 குடும்பங்களுக்காக உத்தேசமாக 6,80,000 அரிசி பைகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முன்கூட்டியே தயார் செய்தது. இதில், 6,16,022 அரிசி பைகள் விநியோகம் செய்யப்பட்டது. எஞ்சிய அரிசியை பொது விநியோகத்திற்கு பயன்படுத்தப்பட உள்ளது.

v) மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தனது முன்மொழிவில் ஒரு 5 கிலோ அரிசியை பை மூலம் வழங்க ரூ.216.81 செலவினம் ஆகும் என தெரிவித்துள்ளார். அதன்படி 6,16,022 குடும்பங்களுக்கு ரூ.13,42,35,338 செலவினம் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். அதன் விபரம் பின்வருமாறு:–

| வ. எண். | விவரங்கள் | செலவினம் (ரூபாயில்) | மொத்த செலவினம் (6,16,022 எண்ணிக்கை) |
|---|---|---|---|
| 1 | 5 கிலோ அரிசி (ஒரு கிலோ ரூ.41.25 X 5 கிலோX 6,16,022 ) | 206.25 | 12,70,54,538/- |

| | | | |
|---|---|---|---|
| 2 | 6,80,000 பாலித்தீன் பையின் விலை (ரூ.5 வீதம் + GST 18% ரூ.0.90) | 5.90 | 40,12,000/- |
| 3 | 6,80,000 பைகளுக்கான தையல் கூலி | 0.16 | 1,08,800/- |
| 4 | 6,80,000 பைகளுக்கான பேக்கிங் கட்டணம் | 2.00 | 13,60,000/- |
| 5 | 6,80,000 பைகளுக்கு மாநில சின்னம் ஒட்டுவதற்கான தொகை | 2.50 | 17,00,000/- |
| | **மொத்தம்** | **216.81** | **13,42,35,338/-** |

vi) அதிகனமழை மற்றும் கடுமையான வெள்ளத்தால் பொதுமக்கள் பாத்திரங்கள், துணிகள், வீட்டு உபயோகப் பொருட்கள் ஆகியவற்றை இழந்து வாழ்வாதாரத்தையும் இழந்து கடும் பாதிப்புள்ளாகியிருப்பதால் மேற்சொன்ன 5 கிலோ அரிசி நிவாரணம் அவர்களது அன்றாட அடிப்படை தேவையினை உடனடியாக பூர்த்தி செய்ய மிக அவசியம். இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்த நிவாரணத்திற்கான செலவினத்தை உடனடியாக மேற்கொண்டுள்ளது. எனவே ரூ.13,42,35,338/- செலவினத்தை மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பெற்று வழங்க வேண்டும் என்றும், மேலும், நியாய விலை கடைகளில் மேற்கொண்ட தடுப்பரண், குடிநீர், நிழலுக்கான பந்தல் மற்றும் வாகனப் பயன்பாடு போன்ற பிற தொடர்புடைய செலவுகளுக்கு நிதியாக ரூ.15,57,000/- வழங்க வேண்டும் என்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அவர்கள் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இந்நிலையில், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மிக கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள 11 வட்டங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட/ இரண்டு நாட்களுக்கு மேல் மழை வெள்ளம் சூழ்ந்து துணிமணிகள்/ பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் இழந்த, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு வெள்ள நிவாரணமாக ரூ.216.81/- மதிப்புள்ள 5 கிலோ அரிசி வீதம், மொத்தம் 6,16,022 குடும்பங்களுக்கு வழங்கவும் மற்றும் பிற தொடர்புடைய செலவுகளுக்கும் நிவாரண நிதியாக ரூ.13,57,92,338/-ஐ மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்ய, தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் மாநில செயற்குழு ஒப்புதல் அளிக்கலாம் என கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின் கருத்துருவினை ஏற்று, மாநில செயற்குழுவின் ஒப்புதலுடன், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மிக கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள 11 வட்டங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட/ இரண்டு

நாட்களுக்கு மேல் மழை வெள்ளம் சூழ்ந்து துணிமணிகள்/ பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் இழந்த, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு வெள்ள நிவாரணமாக ரூ.216.81/– மதிப்புள்ள 5 கிலோ அரிசி வீதம், மொத்தம் 6,16,022 குடும்பங்களுக்கு வழங்க ரூ.13,42,35,338/–ம் மற்றும் பிற தொடர்புடைய செலவுகளுக்கு நிதியான ரூ.15,57,000/– ஆக மொத்தம் ரூ.13,57,92,338/– (ரூபாய் பதிமூன்று கோடியே ஐம்பத்தேழு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து முந்நூற்று முப்பத்தெட்டு மட்டும்)–ஐ மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்க நிர்வாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2245 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 02 – வெள்ளம், புயல் முதலியவை – 101 – கருணை உதவி – மாநிலச் செலவினங்கள் – AE – வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொக்க உதவித் தொகை அளித்தல் – 356 – உணவளித்தல் ரொக்கத் தொகை – 01– உணவளித்தல் ரொக்கத்தொகை.

[IFHRMS த.தொ.கு.2245 02 101 AE 35601]".

5. இவ்வரசாணை நிதி துறையின் அ.சா.எண்.6801245/நிதி (வருவாய்)த் துறை, நாள் 08.03.2024–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வே. ராஜாராமன்,**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர்
மற்றும் மாநில நிவாரண ஆணையர், சேப்பாக்கம். சென்னை–5.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
இயக்குநர், (பேரிடர் மேலாண்மை),
தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை,
சேப்பாக்கம், சென்னை–600 005.
ஆணையர், உணவுப் பொருள் வழங்கல் (ம) நுகர்வோர்
பாதுகாப்புத் துறை, சேப்பாக்கம், சென்னை–600 005.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
12, தம்புசாமி சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை –600010.
மாவட்ட ஆட்சியர்கள், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி.

மாவட்ட கருவூல அலுவலர்கள், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னை–600 008.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை 600 018.

**<u>நகல்</u>**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நீர்வளத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலைகள் (ம)
சிறு துறைமுகங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
உள் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
பொதுப் பணித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை அமைச்சரின் சிறப்பு நேர்முக
உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சரின் சிறப்பு நேர்முக
உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மைத் தனிச் செயலர்,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளரின் தனிச்செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
நிதி/(வருவாய்/வ.செ.பொ.1/வ.செ.பொ.2/வ.வ.I)த் துறை, சென்னை–600 009.
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் (அநமு.3/பே.மே.3)துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

8/2/24

**பிரிவு அலுவலர்**

8/3/2024